## சமூகநீதி நாடு முழுவதும் எதிரொலிக்க காரணம் தி.மு.க. என்பதாலேயே பிரதமர் அவதூறு!

# ‘இந்தியா’ என்ற கூட்டணி பெயர் மோடியை நிலைதடுமாறச் செய்கிறது!

## ‘சன் நியூஸ்’ கேள்விக்களம் விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது விமர்சனம்!

சென்னை, ஆக.13-

“சன் நியூஸ்” தொலைக்காட்சியில், மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற கேள்விக் களம் நிகழ்ச்சியில் “தி.மு.க. Vs பா.ஜ.க.” என மாறுகிறதா தேசிய அரசியல் களம்? என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமதுவின் விவாதம் வருமாறு:

**நெறியாளர் மு.குணசேகரன்:** நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் பதிலுரையோடு நேற்று நிறைவு பெற்றிருக்கிறது. நாடு தழுவிய அளவில் இந்த மூன்று நாட்களும் நாடு எதிர்கொண்டிருக்கக்கூடிய, பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆழமான, காரசாரமான, கருத்து விவாதம் நடந்து முடிந்திருக்கிறது. அந்த விவாதத்தினுடைய முத்தாய்ப்பு என்பது, ஒன்று ஆளும் தரப்பில் பிரதமர் நரேந்திர மோடி பேசியது, எதிர்க்கட்சி வரிசையில் ராகுல் காந்தி உட்பட பல தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். பிரதமர் 133 நிமிடங்கள் பேசினார். மணிப்பூர் விவகாரத்தில் அவர் வாய் திறக்க வேண்டும், வாய் திறக்க மறுக்கிறார் அவைக்கே வர மறுக்கிறார் என்பதை முன்னிட்டுதான் எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையே முன்மொழிந்தார்கள்.

பிரதமர் மூன்றே நிமிடம்தான் மணிப்பூரைப் பற்றி பேசினார். அதிலும் தரவுகள் இல்லை. பொத்தாம் பொதுவான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். இது மணிப்பூர் மக்களை மட்டுமல்ல, வடகிழக்கையே அவர் கைவிட்டு விட்டார், ஏமாற்றமளிக்கிறது என்று அந்தக் கூட்டணியைச் சேர்ந்த எம்.பி. ஒருவரே சொல்லி இருக்கிறார்.

மாறாக பிரதமர், எதிர்க்கட்சிகளை சாடி இருக்கிறார், காங்கிரசை சாடி இருக்கிறார். தி.மு.க.வை காட்டமாக விமர்சித்து இருக்கிறார். இந்த விமர்சனத்திற்கு இன்றைக்கு காங்கிரசும், தி.மு.க.வும் பதில் சொல்லியிருக்கின்றன. எத்தனையோ காங்கிரஸ் பிரதமர்களை நாடு பார்த்திருக்கிறது, மணிப்பூர் விவகாரத்தில் ஒன்றுமே தெரியாதது போல நடக்காதது போல பாவனை செய்கிறார். இதில் பிரதமர் நடவடிக்கைகள் ஏமாற்றமளிக்கிறது, வேதனை தருகிறது. வெட்கக்கேடான வகையில், இந்த முக்கியமான விஷயத்தை பேசும் போது அவர், சிரித்தும், கேளியும், கிண்டலும் செய்தது ஒரு பிரதமருக்கு அழகல்ல என்று ராகுல் காந்தி விமர்சித்து இருக்கிறார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க.வுக்கு எதிராக மூன்று முக்கிய அமைச்சர்கள் பேசி இருக்கிறார்கள். ஒன்று பிரதமர், அடுத்து உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் காங்கிரசை எந்த அளவிற்கு விமர்சித்தார்களோ அதே அளவிற்கு தி.மு.க.வையும் விமர்சித்திருக்கிறார்கள். தி.மு.க.பேசக் கூடிய பேச்சு பா.ஜ.க.வோடு சமரசம் செய்துகொள்ளாமல், ஒரு மதவெறி எதிர்ப்பு, மதவாத அரசியலுக்கு எதிர்ப்பு, மாநில சுயாட்சிக்கான குரல் என்கின்ற கோணத்தில், தொடர்ச்சியாக பா.ஜ.க.வை விமர்சித்து வருவதால் தி.மு.க. எம்.பி.க்கள் பேசும் போது அவர்கள் குரலை கேட்டாலேயே அவர்களுக்கு குலைநடுங்குகிறது என்று முதலமைச்சர் விமர்சித்து இருக்கிறார். இது சார்ந்து இன்று பேசப்போகிறோம்.

தேசிய அரசியல் களத்தின் பேசும்பொருளாக தி.மு.க.வை பா.ஜ.க. ஏன் மாற்றுகிறது? தி.மு.க.வின் அரசியல் செல்வாக்கு தேசிய அளவில் உயர்கிறது என்று பொருளா? அல்லது தி.மு.க.வை விமர்சித்து வட இந்தியாவில் வேறு ஒரு அரசியல் பரப்புரைக்கு பா.ஜ.க. தயாராகிறதா? என்கிற ஒரு கோணம். இன்னொன்று சமரசம் இல்லாமல் எதிர்ப்பதால் இன்றைக்கு தி.மு.க. குறி வைக்கப்படுகிறதா? என்பது இன்னொரு கோணம். இதையெல்லாம் விட, இந்த விவாதத்தில் மக்கள் மனங்களை வென்றவர்கள் யார்? என்பதைப் பற்றி நம்மோடு மனிதநேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது, வலது சாரி ரமேஷ் சேதுராமன் இவர்களோடு மாணிக்தாகூர், இ.பரந்தாமன், வலது சாரி கணபதி ஆகியோர் இணைகிறார்கள். இது குறித்து பத்திரிகையாளர் ஷபீர் அகமது உங்கள் பார்வையில் கருத்து என்ன?

**மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது:** பிரதமர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசுகிறார் என்கிற போது, அதிலும் குறிப்பாக, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது, மணிப்பூர் சம்பவத்தை மையப்படுத்தி கொண்டுவரப்பட்ட தீர்மானம். எதற்கு பிரதமர் முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நாம் பார்க்க வேண்டும். பிரதமர் எடுத்த உடனே மணிப்பூர் பற்றித்தான் பேசி இருக்க வேண்டும். ஆனால் இரண்டு மணி நேரம் கழித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் வெளியே சென்ற பிறகுதான் மணிப்பூர் என்ற அந்த வார்த்தையை உச்சரித்திருக்கிறார்.

அதில் இருந்தே நமக்குத் தெரிகின்றது பிரதமரின் பிரியாரிட்டி என்ன? இந்த அரசாங்கத்தின் பிரியாரிட்டி என்ன? ஏனென்றால் அவருக்கு அரசியல் ரீதியாக என்னை இந்த அவைக்கு வரவைத்து பதில் அளிக்க வைத்து விட்டார்களே, அப்படி என்கிற ஒரு கொந்தளிப்பில் அவர் இருந்தார் என்றே நான் பார்க்கிறேன். இதற்கு முன்பு பிரதமர் பேசி இருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். அரசியல் மேடைகளில் அவர் பேசும் போது ஆக்ரோஷமாகப் பேசுவார், சில சைகைகளை யெல்லாம் காட்டிப் பேசுவார், சில வார்த்தைகளை முதன்மைப்படுத்தி பேசுவார்.

அதே மாதிரியான பேச்சை அவையிலும் அவர் பேசுகிறார் என்கிறபோது, கிட்டத்தட்ட ஒரு அரசியல் ரீதியான ஒரு பேச்சாகத்தான் அது இருந்தது. அரசியல் மேடையில் பிரதமர் எப்படி பேசுவாரோ அதே மாதிரிதான் விவாத்திலும் பிரதமர் பேசி இருக்கிறார். கிட்டத்தட்ட அவருடைய பேச்சில் 90 சதவிகிதம் எதிர்க்கட்சிகளைத் தாக்குவதாகவே இருந்திருக்கிறது.

என்றைக்கு 26 கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து ‘இந்தியா’ என்கின்ற கூட்டணியை உருவாக்கினார்களோ, அன்றில் இருந்தே பிரதமர் தாக்குதல் செய்யத் தொடங்கிவிட்டார். செல்கின்ற இடங்களில் எல்லாம் எதிர்க்கட்சிகளைத் தாக்குவது, அந்த ‘இந்தியா’ என்கிற அந்தக் கூட்டணிக்கான வார்த்தையை மாற்றுவது, அதனை தீவிரவாத குழுக்களோடு ‘இந்தியா’ என்கிற கூட்டணி பெயர் இருக்கிறது என அவர் நிலைதடுமாறி பேசுகிறார். ஏதோ ஒரு இடத்தில் ‘இந்தியா’ என்கிற அந்தப் பெயர் மிகப்பெரிய பாதிப்பை அவருக்கு ஏற்படுத்தி இருக்கிறது. அது அரசியல் ரீதியாகவும் ஏற்படுத்தி இருக்கிறது. அதேபோல கொள்கை ரீதியாகவும், அந்த ‘இந்தியா’ என்கிற பெயர் அவருக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.


ஷபீர் அகமது
பத்திரிகையாளர்


மு.குணசேகரன்
நெறியாளர்

### இவ்வளவு பெரிய கூட்டணி உருவாவதற்கு மிக முக்கியமான காரணம் தி.மு.க.!

இங்கே இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. கூறியது மாதிரி, அந்தமான் நிக்கோபாரில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகிறார், அங்கே சென்று தி.மு.க.வை விமர்சிக்கிறார். போபாலில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகிறார், அங்கே போய் தி.மு.க.வை விமர்சிக்கிறார். அப்போது, தி.மு.க. என்கிற ஒரு இயக்கத்தை அவர் விமர்சிப்பதற்கான காரணம் என்னவென்றால் காங்கிரஸ் கட்சியோடு கடந்த இருபது ஆண்டு காலமாக இவர்கள் பயணிக்கிறார்கள். இவ்வளவு பெரிய கூட்டணி உருவாவதற்கு மிக முக்கியமான காரணம் தி.மு.க.வாக இருக்கிறது.

ஏன் என்றால்? பா.ஜ.க.வின் நோக்கமே, காங்கிரஸ் இல்லாத பாரதம் என்றுதான் பேசினார்கள். இன்று பத்து வருடம் ஆகிவிட்டது. அதனை அவர்களால் முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை. இன்று எல்லா கட்சிகளும் சேர்ந்து காங்கிரஸ் கட்சியின் கரத்தை வலுப்படுத்துகிறார்கள் என்கிறபோது அதனை பார்த்துக்கொண்டு, சகித்துக்கொண்டு இருக்க முடியவில்லை. அந்த சகிப்புத் தன்மை அவருக்கு இல்லை என்பதைத்தான் அந்த இரண்டரை மணி நேரம் பிரதமர் பேசியதில் மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

**நெறியாளர்:** பிரதமர் யாரையும் அவமதிக்கவே இல்லை, அவர் வந்து உட்கார வேண்டும் என்கிற அவசியம் என்ன இருக்கிறது? என்று ஒரு கேள்வியை இங்கே கணபதி முன் வைத்திருக்கிறார்.

**ஷபீர் அகமது:** இன்னும் சில நாட்களில், அவர் ஏன் பிரதமராக இருக்க வேண்டும், மன்னராகக் கூட அவர் மாறலாமே என்று கணபதி பேசலாம். ஏன் என்றால் அவர் பிரதமராக இருக்கிறார் எனும்போது, நாடாளுமன்றத்தில் அவர் பேசாமல், நாடாளுமன்றத்தில் அவர் உட்காராமல் வேறு எங்கே போய் உட்காருவார்? நாடாளுமன்றத்திற்கு வெளியே பேசுகிறார், நாடாளுமன்றத்தின் லைப்ரரியில் போய் பேசுகிறார். ஆனால்நாடாளுமன்றத்திற்குள் வந்து மணிப்பூர் சம்பவம் குறித்து பேச மறுக்கிறார்.

**நெறியாளர்:** எதிர்க்கட்சிகளை பேஸ் செய்ய பயப்படுகிறாரா, அல்லது எதிர்க்கட்சிகளை மதிக்க மறுக்கிறாரா? கேள்வியே கேடக முடியாமல் வலம் வந்த ஒருவரை, எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கேள்வி கேட்கிறார்கள், அப்படி என்கின்ற ஒரு கட்டத்தை, அந்த உண்மையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையா? தி.மு.க.வை டார்க்கெட் வைத்துப் பேசுகிறார். இப்போது பிரதமர் தி.மு.க.வை டார்க்கெட் செய்வதின் வழியாக தி.மு.க.வுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தி, அதனை வீழ்த்தி அரசியலில் ஜெய்க்கிற ஒரு யுக்தி அதற்கு பின்னால் இருக்கா? இல்லை தி.மு.க.விற்கு இதனால் ஒரு நேஷனல் முக்கியத்துவம் உருவாகிறது என்று பார்க்கலாமா?

**ஷபீர் அகமது:** எதிர்க்கட்சிகள் எல்லாம் பிரதமரை விமர்சிக்க ஆரம்பித்து விட்டார்கள். எந்த பந்தைப் போட்டாலும் எதிர்த்தரப்பில் இருந்து அதற்கு ஒரு விளக்கம் வருகிறது, எதிர்த்தரப்பில் அதற்கு ஒரு எதிர்வினை வருகிறது. நீங்கள் அந்த கர்நாடகா தேர்தலிலே அதனை பார்க்கலாம். தி.மு.க.வை அவர் தாக்குவதற்கு காரணம், இதில் என்னுடைய அனுமானம் என்னவென்றால், தமிழ்நாட்டில் ஒரு தொகுதியில் பிரதமர் போட்டியிட வேண்டும் அப்படி என்கின்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான கிரவுண்ட்ஸை அவர் ரெடி செய்துக்கிட்டு இருக்கிறார். அப்போது தி.மு.க.தான் தமக்கு பெரிய ஸ்ட்ராங்கான ஒரு எதிரியாக இருக்கிறது என்கிற போது கொஞ்சம் கொஞ்சமாக தி.மு.க.வை காலி செய்ய வேண்டும் என்று பார்க்கிறார்.

**நெறியாளர்:** ஏற்கனவே ராகுல் பேசும் போது, தமிழ்நாட்டில் நீங்கள் ஒரு போதும் ஜெயிக்க முடியாது என்று பேசி இருக்கிறார். அது மட்டுமல்லாமல் ஏற்கனவே காசிக்கு எம்.பி.ஆக இருக்கிறார், அடுத்து இராமேஸ்வரத்திற்கும் எம்.பி. ஆகி விட்டால், ‘இந்து’ என்ற இணைப்புக்கு பயன்படும் என்று நினைக்கிறாரா?

**ஷபீர் அகமது:** இது வரைக்கும் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திட்டங்களை எல்லாம் பார்த்தால், காசி சங்கமம், அதற்குப் பிறகு குஜராத் சங்கமம், அதற்குப் பிறகு இப்போது கேதார் நாத் சங்கமம் என்று பிளான் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். சௌராஷ்டிரா சங்கமம் என்ற ஒன்றை கொண்டு வந்தார்கள். எல்லாவற்றையும் இந்த தமிழ்நாட்டோடு வட இந்தியாவை இணைப்பது, தமிழ்நாட்டோடு பிரதமருக்கு ஒரு நேரடித் தொடர்பு இருக்கு என்பதை தெரிவிப்பதற்கான ஒரு திட்டங்களை வகுத்துக்கிட்டு இருக்கிறார்கள். அவையெல்லாம் இங்கே எடுபடவில்லை .

ஒரு வருடமாக இவையெல்லாம் இங்கே செய்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவை எல்லாம் இங்கே மக்கள் மத்தியில் பெரிய அளவிற்கு எடுபட மாட்டேன் என்கிறதே என்பது அவர்களுக்குள் இருக்கின்ற விரக்தி. தமிழ்நாட்டில் ஒரு பா.ஜ.க. தலைவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் சொல்கிறார். தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இருக்கிறது. மக்கள் எல்லாம் பக்தியாக இருக்கிறார்கள். ஆனால், ஏன், பா.ஜ.க.வை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள் என்கின்ற ஒரு விஷயம் புரியவில்லை என்கிறார். தமிழ் நாட்டைப் பற்றி புரியாமல் அவர்கள் எல்லாம் இங்கே வந்து தமிழ்நாட்டில் களமாட வேண்டும். தமிழ் நாட்டை எப்படியாவது தன் வசப்படுத்த வேண்டும் என்று ஒரு எண்ணத்தின் அடிப்படையில் எல்லாம் பேசுகிறார்கள்.

அதனால்தான் தமிழ்நாட்டின் மீது இருக்கக் கூடிய கோபம் என்பது தி.மு.க. மீதான கோபமாக மாறுகிறது. இன்னொன்று நாடாளுமன்றத்தில் பேசும்போது ராகுல் காந்தி உள்ளிட்டோர் எல்லாம் பேசினார்கள். இதில் ரொம்ப பவர்புல்லான பேச்சு கனிமொழி அவர்களுடைய பேச்சாக இருந்தது. நிறைய கருத்துகளுடன் அவருடைய பேச்சு அமைந்திருந்தது. அதனால்தான் அவருக்கு எதிர்வினை ஆற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

**நெறியாளர்:** எதிர்க்கட்சி வரிசையில் எம்.பி.க்கள் குறைவு, பி.ஜே.பி.க்குத்தான் எம்.பி.க்கள் அதிகம், எதிர்க்கட்சி மொத்த எம்.பி.க்களைச் சேர்த்தாலே நூற்று சொச்சம்தான். அதில் 40 பேர் தமிழ்நாட்டில், எதிர்வரிசையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்த உடனே வெள்ளை சர்ட் போட்டு, கரை வேட்டி கட்டிக்கிட்டு, அது காங்கிரஸ் எம்.பி.க்களாக இருந்தாலும், தி.மு.க. எம்.பி.க்களாக இருந்தாலும் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த சு.வெங்கடேசன், சுப்பராயன் போன்ற எம்.பி.க்களாக இருந்தாலும் எதிர்த்து பேசுகிறவர்கள் எல்லாம் தென்னிந்தியாவில் இருந்து வருகிறார்கள். ஒன்று தமிழ்நாடு, மற்றொன்று கேரளா, அதுவும் தமிழ்நாட்டில் இருந்து வருகிறவர்கள் காரம்சாரமா பேசுகிறார்கள். இந்த உணர்வில் இருந்து அந்த எதிர்ப்பு வருகிறது என்று புரிந்து கொள்ளலாமா?

**ஷபீர் அகமது:** நிச்சயமாக அந்த உணர்வு என்பது இருக்கிறது. அவர்களை எதிர்த்து யாரும் கேள்வியே கேட்கக்கூடாது. நாடாளுமன்றத்தில் இதுவரைக்கும் இருக்கக் கூடிய எல்லா கட்சிகளையும் பார்த்தால், எதிர்த்து கேள்வி கேட்ட எல்லா கட்சிகளையும் அவர்கள் விமர்சித்து இருக்கிறார்கள்.

தி.மு.க. மீதான விமர்சனம் அதிகரித்து இருக்கிறது. அதற்கான காரணம் என்ன வென்றால் எதிர்த்து கேள்வி கேட்கிறார்கள். அதிலும் மிக குறிப்பாக சோஷியல் ஜஸ்டீஸ் (சமூக நீதி) இன்றைக்கு இந்தியா முழுவதும் பரவலாகப் பேசப்படுகிறது, இன்றைக்கு சோஷியல் ஜஸ்டிஸ் என்கிற ஒருவார்த்தை பீகாரிலும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. கர்நாடகா தேர்தலில் அது உச்சரிக்கப்பட்டு இருக்கிறது. இந்த அரசியலை அவர்களால் எதிர்க்கொள்ள முடியாது. இந்த அரசியலை எதிர்க்கொள்ள வேண்டும் என்றால், மாநில அளவிற்கு அவர்கள் வலிமையாக இல்லை. அதனால்தான் தி.மு.க. மீதான தாக்குதலை அவர் கள் ரொம்ப துல்லியமாக செய்கிறார்கள்.

மணிப்பூர் இன்றோடு முடிந்துவிடக்கூடிய பிரச்சினை இல்லை. மணிப்பூர் பற்றி யாரும் பேசாமல் இருந்தால் மணிப்பூர் பற்றி உலகத்துக்குத் தெரியாது. நாடாளுமன்றத்தில் எந்த எம்.பி.யும் இதுபற்றி பேசாமல் இருந்தால், இது உலகத்துக்குத் தெரியாது. அவருடைய பேச்சை பேசக்கூடிய நபர்கள் சன்சாட் டி.வி.யில் காண்பிக்காமல் இருந்தால் மணிப்பூரில் நடக்கும் பிரச்சினை உலகத்துக்குத் தெரியாது அப்படி என்று நினைக்கலாம்.

ஆனால் மணிப்பூர் என்பது கிட்டத்தட்ட ஒரு இருபது ஆண்டுகள் பின்னோக்கிப் போய் இருக்கிறது. அங்கே நடந்திருக்கக்கூடிய கலவரம், இயல்பு நிலைக்குத் திரும்ப இன்னும் பல ஆண்டுகள் ஆகும்.

**நெறியாளர்:** நீங்கள் டி.வி. நிருபராக இருந்தவர். நிர்பயா சம்பவம் நடந்தபோது நிர்பயா சம்பவம் ஒரு மாதக்காலம் பேசப்பட்டது, அந்தச் சம்பவம் கொடூரமானது, அந்தச் சம்பவம் பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு இருந்தது. அப்போதுகூட வரிந்து கட்டிக் கொண்டு ஆங்கிலச் சேனல்கள் நேரலைகளையும், பல அடுக்கு விவாதங்களையும் வைத்தது. எந்த அமைச்சரும் வெளியில் வந்து பேச முடியாத நெருக்கடியைக் கொடுத்தார்கள். இன்றைக்கு அதே மாதிரியான இன்டர்சிட்டி மீடியா மணிப்பூரில் காட்டுகிறதா?

**ஷபீர் அகமது:** கண்டிப்பாக இல்லை. ஊடகங்கள் மிகப்பெரிய துரோகத்தை மணிப்பூர் மக்களுக்கு செய்திருக்கிறார்கள். ஒரு ஊடகவியலராக இருக்கின்ற நானே சொல்கிறேன். மணிப்பூர் சம்பவத்தை தேசிய ஊடகங்கள் இதுவரைக்கும் பெரிய அளவிற்கு கவர் செய்யவில்லை. அங்கே போனாலும் அவர்கள் செய்யக் கூடிய ஒரு தந்திரம் என்னவென்றால், மணிப்பூரில் ஒன்றிய அரசாங்கம் எல்லாம் ஒன்றும் செய்யவில்லை. அங்கே இருக்கின்ற பா.ஜ.க. முதலமைச்சர்தான் பிரச்சினை என்கிற மாதிரி மடைமாற்றக்கூடிய ஒரு வேலையை ஊடகங்கள் செய்துக் கொண்டிருக்கிறது.

பிரதமர் மோடி, தான் என்ன நினைத்தாரோ அதனை அவையில் பேசிவிட்டார். அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் அவர் ஜெயித்து இருக்கலாம். ஆனால் அவர் நிரந்தரமாக மணிப்பூருடைய மக்களை மிகப்பெரிய துயரத்தில் ஆழ்த்திருக்கிறார் என்பதுதான் நிலை. அவருடைய தோல்விதான் மணிப்பூர் மக்களின் தோல்வியாக இருக்கிறது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது விவாதத்தில் தமது கருத்துக்களை பதிவு செய்தார்.

---

### ஆசிய ஆக்கி சாம்பியன்ஸ் தொடர்

# 4-வது முறையாக கோப்பையை வென்று இந்தியா சாதனை!

## இந்திய ரசிகர்கள் உற்சாகம்!

சென்னை, ஆக.13

ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி கோப்பையை இந்திய அணி நான்காவது முறையாக வென்று அசத்தியிருக்கிறது. சென்னையில் நடைபெற்ற இந்த தொடரில் இந்திய அணி தோல்வியைத் தழுவாமல் இறுதிப்போட்டி வரை வந்தது.

2007ம் ஆண்டுக்கு பிறகு சென்னையில் இந்த தொடர் நடைபெறுவதால் தமிழக ரசிகர்கள் மத்தியில் இது மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இறுதிப்போட்டியில் மலேசியாவை இந்திய அணி எதிர்கொண்டது.

மலேசியா அணி தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடி இந்தியாவுக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. எனினும் இந்திய அணி ஆட்டத்தின் ஒன்பதாவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தது. மலேசியா அணி சுதாரித்துக் கொண்டு விளையாடி அடுத்தடுத்து கோல்களை அடித்தது. ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் மலேசியா, முதல் கோலையும் 18வது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் அடித்தது.

அதனால் இந்திய வீரர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதனை சமன் செய்ய இந்திய வீரர்கள் முயற்சித்த நிலையில், மலேசியா மூன்றாவது முறை கோலையும் போட்டு தமிழக ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தது .ஆட்டத்தின் முதல் பாதியில் மலேசியா மூன்றுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்று இருந்தது. இதனை அடுத்து இந்திய அணி வீரர்கள் அதிரடியாக விளையாடி ஆட்டத்தை சமன் செய்ய முயற்சித்தனர்.

ஆனால் மலேசிய வீரர்கள் துடிப்பாக இருந்தார்கள். 45வது நிமிடத்தில் இந்தியாவுக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை ஹர்மன் பிரித்சிங் கோலாக மாற்றினார். அதே நிமிடத்தில் இந்தியாவில் மூன்றாவது கோலை குர்ஜந்த் சிங் அடிக்க மைதானமே உர்சாகத்தில் அதிர்ந்தது. அதனால் போட்டி மூன்றுக்கு மூன்று என்ற கணத்தில் சமநிலை பெற்றது. அந்த நிலையில் நான்காவது கோலை அடிக்க இரு அணிகளும் கடுமையாக போராடியதால் ஆட்டத்தில் பரபரப்பு நெருப்பாக பறந்தது.

மலேசியாவுக்கு 50வது நிமிடத்தில் பெனால்டி கார்னர் கிடைத்தது. ஆனால் அதனை அவர்கள் தவற விட்டனர். ஆட்டத்தில் கடைசி பத்து நிமிடங்களில் இந்திய அணி அடுத்தடுத்து கோல் வாய்ப்பை மலேசியா கீப்பர் அரணாக நின்று தடுத்தார்.இந்த நிலையில் ஆட்டத்தின் 56வது நிமிடத்தில் இந்திய அணி வின்னிங் கோல் அடிக்க இந்திய அணி 4க்கு3 என்ற கணக்கில் வெற்றிக்கனியை பறித்தது. அதன் மூலம் இந்தியாவில் நான்காவது முறையாக ஆசிய கோப்பை சாம்பியன்ஸ் தொடரில் வென்று காட்டியுள்ளது.

---

### வீ.வடிவேல் தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !

# 43 அ வட்டத்தில் கலைஞர் நினைவு நாள்! 500 நபர்களுக்கு உணவு!

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, வழங்கினார் !

சென்னை ஆக. 13-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட கழக சார்பில்,மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆலோசனைப்படி வட்டச் செயலாளர் வீ.வடிவேல் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5வது நினைவு நாளை முன்னிட்டு காசிமேடு புதுமனை குப்பம் அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 500 நபர்களுக்கு அறுசுவை உணவுவை பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலையில் ஆர்.கே.நகர் சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் வழங்கினார்.

இந்நிகழ்வில் இரா.மதிவாணன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, இர.பொன்இளவரசன், எஸ்.பி.எஸ்.புத்தன், பொ.து.ராஜா, என்.பவித்ரா எம்.சி, எஸ்.கே.இளங்கோ, வெ.சு.சத்தியநாராயணன், ஜெ.பிரேம் ஆனந்த், டி.லெனின், வி.வி.ரமேஷ், ஏ.வெங்கடேஷ், கே.வாசு, சா.திருப்பதிசாமி, ஜெ.சுரேஷ்பாபு, சுமன், பி.சதிஷ்குமார், மு.டில்லிதுரை, எல்.ரமேஷ், மா.ஜெயசந்திரன், எஸ்.கலா,எ.சிவராஜ், வி.சிவா, எஸ்.முத்தமிழன், எம்.அருண், ஜெ.விஜேஷ், பூங்கோதை,எரிமலை பாலு, டி.எல்.பி.ரவி, ஜி.மைக்கல்,எ.சுரேஷ் , ஆர்.சிவக்குமார், என்.வடிவேலன், எ.சுரேஷ், ஆர்.சிவக் குமார், டி.வீரராகவன், சரத், என்.பார்த்திபன், ஆர்.பழனிசாமி, எஸ்.கே.நந்தகோபால், எஸ்.விமல்நாதன், எஸ்.டில்லிபாபு, ஜெ.விக்னேஷ், பி.குப்பு ராஜ், பி.வில்வபாலு, ஜெ.பரத்குமார், சி.பிரேம் குமார், கே.குமார், ஆர்.விமல், ஜெ.மகேஷ்,ஜெ.சுமதி, ஆர்.ரீதர், கே.எம்.சேகர், கெ.ரமேஷ்,பாரி, எஸ்.சி.சுரேஷ், நவமணி, எஸ்.கோவிந்தராஜ், மற்றும் இளைஞர் அணி நண்பர்களும் பாகமுகவர்களும்,கழக தோழர்களும் கலந்து கொண்டனர்.